(முற்பகல் 11—20)

(ஈ) குறிஞ்சிப்பாடி விவசாய விற்பனைக் கூடத்தில் போதுமான இடவசதியில்லை.

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''குறிஞ்சிப்பாடியில் உள்ள விவசாய விளைபொருள் விற்பனை அங்காடியில் போதுமான இடவசதி இல்லாததால் விவசாயிகள் தங்களுடைய விவசாய விளை பொருள்களைக் கொண்டு வந்து விற்பனை செய்ய முடியாமல் படும் அவதியும், அந்த இடத்தை விரிவு படுத்த வேண்டிய அவசியமும் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

அறிக்கை.

தென் ஆற்காடு விற்பனைக் குழுவின் கீழ் குறிஞ்சிப்பாடி விற்பனைக்கூடம் 29—8—1973 முதல் சுமார் 1 ஏக்கர் நிலப்பரப்பில், வாடகை இடத்தில் இயங்கி வருகிறது. விவசாயிகள் தங்கள் விளை பொருட்களைக் கொண்டு வந்து விற்க முடியாமல் அவதிப்படும் நிலைமை இல்லை. இவ் விற்பனைக் கூடத்தில் அலுவலகக் கட்டிடம், பரிவர்த்தனைக் கூடங்கள், விவசாயிகள் தங்கும் இடம் ஆகிய வசதிகள் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் இவ் விற்பனைக் கூடத்திற்கு சொந்தமாக மேற்படி வசதிகளை அமைக்கும் பொருட்டு 5.87.5 ஹெக்டர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு கட்டிடங்கள், கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் தற்போது நடைபெறுகிற இந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் ஒரு ஏக்கர் நிலத்தில் வாடகை இடத்தில் இருக்கிறது. அதை விரிவு படுத்துகிற வகையில் 5ஹெக்டர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு பல ஆண்டுக்காலம் ஆகிறது. ஆகவே இதை விரிவுபடுத்துவதற்கு இவ்வளவு காலதாமதம் ஏற்படுவதற்குஎன்ன காரணம்? இதற்குத் துறை காரணமா அல்லது வேலையை எடுத்தவர்கள் காரணமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, 5.87.5 ஹெக்டர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. விரைவில் முடியும். விரைவிலே அது முடியவில்லை என்று சொன்னால், விரைவில் முடிப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுமான வேலைகள் நடைபெறுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். கட்டுமான வேலைகள் பிரிக்கப்பட்டு, பில்லர் வேலைகள், அதாவது கட்டிட வேலைகளைச் செய்வதற்கு ஒருவரையும், மேற்கூரை அமைப்பதற்கு ஒருவரையும் நியமித்து, கட்டிட வேலை முடிந்துவிட்டதாகவும், மேற்கூரை வேலையைச் செய்கிறவர்கள் காலதாமதம் செய்வதாகவும்—அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தெரியாமல் இருப்பதாகவும்—நான் கேள்விப்படுகிறேன். ஆகவே இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு, அங்கே இருக்கின்ற விவசாயிகள் நன்மையைக் கருதி உடனடியாக முடிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, வேலை தாமதமாவதாக மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். வேலை தாமதமாவதைத் தவிர்த்து, விரைவிலே அந்தக் கட்டுமானப் பணிகளை முடிப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

(உ) புகளூர் காகித ஆலைக்குப் பணியாளர்கள் நியமிக்கும் முறை.

திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''புகளூர் காகித ஆலையின் நிர்வாகம், பணியாளர்களை பணியில் அமர்த்த கடந்த இரண்டு வருடங்களாகச் செய்தித் தாளின் மூலம் விளம்பரப்படுத்தி முறையாக மனுச் செய்தவர்களுக்கு வேலை கொடுக்காததால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலையின் பல்வேறு பதவிகளுக்கு வேலை வாய்ப்பு நிறுவனம் மூலம் பணியாளர்கள் அமர்த்தப்படுகின்றனர். உயர் தகுதியும், அனுபவமும் உடைய நபர்கள் தேவைப்படும்போது முக்கிய நாளிதழ்களில் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. அவ் விளம்பரங்களின் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள், தகுதி வாரியாக வரிசைப்படுத்தப்பட்டு, விண்ணப்பதாரர்களுக்கு தேர்வுக் குழு மூலம் நேர்முகத் தேர்வு நடத்தப்படுகிறது. தேர்வுக் குழு பரிந்துரை செய்யும் நபர்கள் இந்நிறுவன பதவிகளுக்கு தர்ந்தெடுக்கப்படுகின்றனர்.